**I ADDL. DISTRICT MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**MCOP.NO.412/2017**

**NAME** : சுலைமான்

**FATHER NAME** :

**VILLAGE** :

**TALUK** :

**CALLING** :

**RELIGION** :

**AGE** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 20.10.2022.**

முதல் விசாரணை

கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எனக்கு படித்து காண்பித்தார்கள் தெரிந்து கொண்டுதான் கையொப்பம் செய்தேன். கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

விபத்தில் இறந்துபோனது என் அப்பா. பாபு என்கிற அப்துல் ரகுமான். என் அப்பாவிற்கு 48 வயது. அதைக் காண்பிக்க ஆதார் கார்டு தாக்கல் செய்யவில்லை. வேலை பார்த்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் அப்பா ஸ்கிராப் வேலை பார்த்தார். வருமானத்தை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை. ரூ.20ஆயிரத்திற்கு மேல் சம்பாதித்தார். விபத்து நடந்த தேதி 12.02.2015. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. காலை 6மணிக்கு நடந்ததாக காவல் ஆய்வாளர் தகவல் சொன்னார். அப்பா சென்ற வண்டி எண்.TN23-BJ-0615. அந்த வண்டிதான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்று விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த வண்டியில் அவர் அன்ஆத்தரைஸ்டு பேசஞ்சராக உட்கார்ந்திருந்தார் என்றால் சரியல்ல. லாரிதான் நஷ்டஈடு கொடுக்கவேண்டுமேயன்றி வேன்காரர் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. லாரியின் ஓட்டுனரின் ஆஜாக்கிரதையால்தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. 4ம் எதிர்மனுதாரர்தான் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றாலும் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொபடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈட்டுத்தொகை அதிகப்படியானது என்றாலும் 2ம் எதிர்மனுதாரர் அந்த தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

4ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.